**<u>பொள்ளாச்சி நகராட்சி</u>**

**<u>20.09.2021 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தில்</u>**

**<u>நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்</u>**

**<u>தீர்மான எண்.3030</u>**

**3030)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.14000/2021/இ1, நாள்–09.09.2021ல் கோரியுள்ளபடி பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக ஏற்படுத்தியுள்ள மனைப்பிரிவுகள் மற்றும் விடுபட்ட இடங்களில் புதிதாக LED தெருவிளக்குகள் பொருத்துதல் பணிகளுக்கு ரூ.111.50 இலட்சத்திற்கு பிரேரணை தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டு 20.09.2021ல் பிரேரணை அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பணிகளின் விவரம்:**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே, மின்கம்பம் மற்றும் தெருவிளக்கு மின் கம்பி உள்ள இடங்களில் LED விளக்குகள் பொருத்துதல் பணி. | 74.00 |
| 2. | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிதாக தெரு வளிக்கு மின் கம்பி அமைத்து LED விளக்குகள் பொருத்துதல் பணி. | 25.50 |
| 3. | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய மின்கம்பம் மற்றும் தெரு விளக்கு மின் கம்பி அமைத்து LED விளக்குகள் பொருத்துதல் பணி. | 12.00 |
| | **மொத்தம்** | **111.50** |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அரசு மானியம் வழங்கும் தொகையில் பணி மேற்கொள்ளலாம்.

**ந.க.எண்.4557/2021/இ1**

**3031)** இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள பெருமாள்செட்டி வீதியில் உள்ள கடை எண்.14 குத்தகைக்கு எடுக்கப்பட்ட திரு.எம்.முகமதுஇஸ்மாயில் என்பவர் கடையை நடத்த இயலாத காரணத்தினால் மேற்கண்ட கடையினை நகராட்சி வசம் திரும்ப ஒப்படைக்கப்பட்டு விட்டதால் மேற்படியாளர் செலுத்திய வைப்புத் தொகையினை தனக்கு திரும்ப வழங்க விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் வைப்புத் தொகை காலங்கடந்த வைப்பு நிதி கணக்கில் உள்ளது. (வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண்.10 மற்றும் 13) எனவே மேற்படி தொகை ரூ.1,63,449/–ல் ரூ.33,100/–ஐ வரிவிதிப்பு ஈடு செய்வதற்காக ரூ.33,100/–ஐ பிடித்தம் செய்து மீதி தொகை ரூ.1,30,349/–னை திரு.எம்.முகமது இஸ்மாயில் என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.3845/2021/பி4**

**3032)** இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள UPS BATTERY ACCESSORIES மற்றும் PRINTER CATRIDGE REFILLING 2017–2018ம் ஆண்டு பராமரிப்பு மேற்கொண்ட பணிக்காக திரு.சாகர் எலக்ட்ரானிக்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை ரூ.13,150/–யை தனக்கு திரும்ப வழுங்க விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் வைப்புத் தொகை காலங்கடந்த வைப்பு நிதி கணக்கில் உள்ளது. தணிக்கை முடிவுற்றதாலும் மற்றும் தணிக்கை நிலுவை ஏதும் இல்லாததாலும் மேற்படி தொகை ரூ.13,150/–யை திரு.சாகர் எலக்ட்ரானிக்ஸ் என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**திரும்ப வழங்க வேண்டிய வைப்புத் தொகையின் விவரம்**

| வ எண் | பணி விபரம் | நிதி | தொகை | பக்க எண் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள UPS BATTERY ACCESSORIES மற்றும் PRINTER CATRIDGE REFILLING 2017–2018ம் ஆண்டு பராமரிப்பு பணி. | EMD (வருவாய் நிதி) | 5,100 | 42 |
| | | ASD (வருவாய் நிதி) | 5,100 | 49 |
| | | ASD (வருவாய் நிதி) | 2,950 | 43 |
| | | **TOTAL** | **13,150** | |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.3612/2017/பி4**